**மழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 27.03.2018

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 மாசி மாதம் 02ஆம் நாள் **27.03.2018 செவ்வாய்க்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

**பொருள் 01**:

இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன வாரச்சந்தையில் கட்டண வசூல் செய்யும்குத்தகை உரிமம் நாள் 23.03.2018-ம் தேதி நடைபெற்ற பொது ஏல ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக் கேள்வித் தொகை | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | A. தமிழ்ச்செல்வி,<br>க/பெ.அழகுராஜா,<br>கிழக்கு தெரு மெய்யனப்பட்டி,<br>உசிலம்பட்டி தாலூகா,<br>சீமானூத்து, மேக்கிலார்பட்டி. | -- | ரூ.20,00,000/- |
| 2. | B.சிலம்பரசன்,<br>W/1, பிள்ளையார் கோவில் தெரு,<br>கருநாக்கமுத்தன்பட்டி, தேனி. | -- | ரூ.22,25,000/- |

**அலுவலகக்குறிப்பு** :

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஆண்டுகுத்தகை தொகை உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.22,25,000/- என திரு.சிலம்பரசன் என்பவர் கோரிய ஒப்பந்தப்புள்ளி தொகையை உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ஏற்று மேற்படி குத்தகை இனத்தினை திரு.ந.சிலம்பரசன் என்பவர்க்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.5647/2018/அ3)

**தீர்மான எண். 463 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 02:

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜ் பேருந்து முனைய கட்டண கழிப்பபற வசூல் செய்யும் குத்தகை உரிமம் நாள் 23.03.2018-ம் தேதி நடைபெற்ற பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக் கேள்வித் தொகை | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.M.பால்பாண்டி,<br>த/பெ.மாயாண்டித்தேவர்,<br>பண்ணைப்பட்டி,<br>உசிலம்பட்டி. | -- | ரூ.3,57,000/- |
| 2. | திரு.K.ராம்குமார்,<br>த/பெ.கருப்பத்தேவர்,<br>பண்ணைப்பட்டி,<br>உசிலம்பட்டி. | -- | ரூ.3,53,000/- |

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு மூன்றாவது முறையாக நாள் 23.03.2018-ம் தேதி நடைபெற்ற பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச தொகை ரூ.3,57,000/- கூடுதலாக இருப்பதால் மேற்படி உயர்யந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகையை திரு.M.பால்பாண்டி என்பவர் கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.5647/2018/அ3)

**<u>தீர்மான எண். 464 அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 03:

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜ் பேருந்து முனையத்தில் கிழக்கு பக்க க.எண்.21 மாத வாடகை பெறுவதற்காக நாள் 23.03.2018-ம் தேதி நடைபெற்ற பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் ைக்கப்படுகிறது.

| வ.எண் | பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக் கேள்வித் தொகை | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.R.ராஜா,<br>மெயின்ரோடு,<br>திருச்செந்தூர் காலனி,<br>கோடாங்கிபட்டி,<br>தேனி. | -- | ரூ.3,000/- |
| 2. | திரு.P.பிரதீப்குமார்,<br>கோடாங்கிபட்டி,<br>திருச்செந்தூர் காலனி,<br>தேனி. | -- | ரூ.3,500/-/- |

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

மேற்கண்ட கடை எண்.21-க்கு மாத வாடகை குத்தகை உரிமம் பெறுவதற்காக 11-வது முறையாக நடைபெற்ற பொது ஏல மற்றும் ஒப்பவந்தப்புள்ளியில் திரு.P.பிரதீப்குமார், என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.3,500/- ஐ கூடுதலாக இருப்பதால் மேற்படி உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை திரு. P.பிரதீப்குமார், என்பவர் கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.5647/2018/அ3)

**<u>தீர்மான எண். 465 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 04</u>:

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலைய (கர்னல் ஜான் பென்னிகுவிக்) முகப்பில் உள்ள பொருட்கள் பாதுகாப்பு வைப்பு 5 அறைகள் மாத வாடகை பெறுவதற்காக நாள் 23.03.2018-ம் தேதி நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண் | பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக் கேள்வித் தொகை | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.M.சக்தி,<br>த/பெ.முத்தையா,<br>28/A, முத்துநகர்,<br>தேனி. | -- | ரூ.2,100/- |

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

மேற்கண்ட குத்தகை இனத்திற்கு மாதவாடகை குத்தகை தொகையினை ஏற்று ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளதால் மேற்கண்ட ஏலக்கேள்வியை அனுமதித்து உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.5647/2018/அ3)

**<u>தீர்மான எண். 466 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 05</u>:

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலைய (கர்னல் ஜான் பென்னிகுவிக்) க.எண்.54 மாத வாடகை குத்தகை உரிமம் பெறுவதற்காக நாள் 23.03.2018-ம் தேதி நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக் கேள்வித் தொகை | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.R.சசிகுமார்,<br>த/பெ.ராஜாங்கம்,<br>37, முனியாண்டி கோவில் தெரு,<br>வடபுதுப்பட்டி. | ரூ.13,200/- | ரூ.13,150/- |
| 2. | M.ராஜேஸ்குமார்,<br>த/பெ.முத்துகுமார்,<br>97, வைரவசாமிகோவில் தெரு,<br>அன்னஞ்சி. | -- | ரூ.13,150/- |

<u>அலுவலகக்குறிப்பு</u> :

மேற்கண்ட ஏலக்கேள்வி ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சசிகுமார் என்பவர் ஏலக்கேள்வியாக மாத வாடகை ரூ.26,100/-ஏலக்கேள்வி கோரி திரு.பெரியகருப்பன் என்பவர்க்கு உத்தரவு வழங்கப்பட்டது தொடர்ந்து கடை நடத்த இயலாமல் ஓராண்டிற்குள் ஒப்பபடைப்பு கடையினை நகராட்சி வசம் ஒப்படைக்க விருப்ப மனு வழங்கியுள்ளாரா. மேலும் தொடர்நது 2 முறை பொது ஏலம் விடப்பட்டதில் குறைந்த வாடகைப்புளிகள் வரப்பெற்றது. நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு மேற்கண்ட ஏலக்கேள்வியை அனுமதித்து திரு.சு.சசிக்குமார் என்பவர்க்கு உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.5647/2018/அ3)

**<u>தீர்மான எண். 467 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 06</u>:

இந்நகராட்சிக்கு சொந்தமான மரங்களின் மீதான மகசூல் அனுபவிக்கும் குத்தகை உரிமத்தை நாள் 23.03.2018-ம் தேதி நடைபெற்ற பொது ஏல ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்களின் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச பொது ஏலக் கேள்வித் தொகை | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.பெரியசாமி,<br>த/பெ.லட்சுமணன்,<br>91, புகையினை தோட்டம்,<br>பெரியகுளம். | ரூ.1,19,500/- | ரூ.76,139/- |
| 2. | திரு.U.கணேசன்,<br>த/பெ.உடைச்சி,<br>துரைராஜாபுரம்,<br>அணைக்கரப்பட்டி. | ரூ.65,000/- | ரூ.1,20,000/- |
| 3. | திரு.R.கதிரேசன்,<br>நேருஜி ரோடு,<br>தேனி. | -- | ரூ.51,000/- |

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

மேற்கண்ட ஏலக்கேள்வி ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.U.கணேசன் என்பவர் ரூ.1,20,000/-க்கு கூடுதலாக ஏலக்கேள்வி கோரியுள்ளார். பலன் தரும் மரங்கள் தொடர்பான பொது ஏலம் கடந்த ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு ஏலம் விடப்பட்டது.

| | |
|---|---|
| 2015-2016 | ரூ.71,000/- |
| 2016-2017 | ரூ.74,500/- |
| 2017-2018 | ஒப்பந்தப்புள்ளி வழங்கப்படவில்லை |

மேற்கண்ட பலன் தரும் மரங்கள் 3 வருட சராசரிரிய விடகூடுதலாக இருப்பதால் எலக்கேள்வியை அனுமதித்து உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

**<u>தீர்மான எண். 468 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 07</u>:

இந்நகராட்சியின் பொதுசுகாதார பிரிவில் கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடும் 75 DBC பணியாளர்களின் ஒப்பந்த காலம் மார்ச் 2018 உடன் முடிவடைய உள்ளது. தற்போது நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் ஏற்படாமல் தடுப்பு நடவடிக்கைக்காக துப்புரவு ஆய்வாளர் மற்றும் சுகாதார அலுவலரின் 12.03.2018–ம் தேதிய குறிப்பின் படி தற்போது பணிபுரிந்து வரும் 75 DBC பணியாளர்களில் 50 பணியாளர்களாக குறைத்து கொண்ட ஏப்ரல் 2018 மாதம் முதல் செப்படம்பர் 2018 மாதம் வரை **6** மாதங்களுக்கு ஏற்கனவே சப்ளை செய்து வரும் TRUSTUS OUTSOURCING SOLUTIONS PVT LTD – CHENNAI – நிறுவனத்திற்கு ஏற்கனவே அந்நிறுவனம் கோரிய ஒப்பந்தப்புள்ளி தொகையின் அடிப்படையில் மேலும் **6** மாத காலங்களுக்கு **(** ஏப்ரல் 2018, முதல் செப்டம்பர் 2018 வரை **)** நீட்டிப்பு செய்வதற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் மேற்படி பணியினை **6** மாதங்களுக்கு நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளுவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2400000/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி ஒப்பந்த காலத்தினை மேலும் **6** மாத காலங்களுக்கு நீட்டிப்பு செய்யப்பட்ட விபரத்தினை மேற்படி நிறுவனத்திற்கு தெரிவித்து வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.836/2018/எச்1)

**<u>தீர்மான எண். 469 அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 08:

தேனி-அல்லிநகரம் நகராட்சி பகுதியில் அன்றாடம் சேகரிக்கும் குப்பைகளை தினமும் வாகனத்தில் நிரப்பப்பட்டு சுமார் 13 சி.மீ தொலைவில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. மேற்படி பணிக்கு மொத்தம் பொது சுகாதார வாகனம் 11 உள்ள நிலையில் 6 நகராட்சி ஓட்டுநர்கள் மற்றும் 2 Texco நிறுவன ஓட்டுநர்களை வைத்து தினமும் சுகாதாரப்பணி மேற்கொள்ளுவதற்கு காலதாமதம் ஆவதால் பொதுசுகாதாரப்பணி மிகவும் பாதிப்படையும் நிலையும் உள்ளதால் 11 வானத்திற்கு 6 நகராட்சி ஓட்டுநர்கள் மற்றும் 2 Texco நிறுவன ஓட்டுநர்கள் போக மீதம் உள்ள 3 வாகனத்திற்கு உரிய ஓட்டுநர்களை Texco நிறுவனம் மூலம் 3 ஓட்டுநர்கள் நியமிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது இதற்காகும் உத்தேச செலவினம் மாதம் 1.00 இலட்சம் ஆகும்.

**அலுவலகக்குறிப்பு** :

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணிக்கு உரிய செலவினத் தொகையை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேறகொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.835/2017/எச்1)

**தீர்மான எண். 470 1, 2. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 09:

நகராட்சி நிர்வாகம் ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.4604/ P3 /2018, நாள் 15.02.2018-ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண்.15 முதல் 32 வரை உள்ள மொத்தம் 18 வார்டுகளில் குப்பைகள் சேகரித்து, நகராட்சி குப்பை சேகரிக்கும்கூடத்தில் சேர்க்கவும் மற்றும் உர.கிடங்கில் Bio-Mining Process -க்கான தொழிற்கூடத்தில் பணி செய்யவும் மற்றும் அனைத்து திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் மயம் மூலம் மேற்கெகள்ளுவதற்கு 100 துப்புரவு பணியாளர்களை கொண்டு இந்நகர் பகுதிகளில் துபிபுரவு பணி மேற்கொள்ளுவதற்கு 14.03.2018-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற கீழ்கண்ட விபரப்படியான நிறுவனத்தில் கோரிய கேள்வி தொகை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை | ஒரு பணியாளருக்கு வழங்கும் தொகை |
|---|---|---|---|
| 1. | J.J.INFO Tech. Madurai | 100 | 405 |
| 2. | Pon Ramar, Madurai | 100 | 423 |

<u>அலுவலகக்குறிப்பு</u> :

1. மேற்படி பணிக்கு வரிசை எண்.1-ல் குறிப்பிட்டுள்ள நிறுவனமான J.J.INFO Tech. Madurai என்ற நிறுவனம் ஒரு பணியாளருக்கு ரூ.405/- என குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியதை தொடர்ந்து அன்னாரின் ஒப்பபந்தப்புள்ளி தொகையினை ஏற்று வேலை உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார தபணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரிய J.J.INFO Tech. Madurai
3. பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேறகொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.835/2017/எச்1) என்ற நிறுவனத்திறகு வேலை உத்தரவு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டதையும், வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.617/2017/எச்1)

**<u>தீர்மான எண். 471 1. பதிவு செய்யப்பட்டது. 2. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 10</u>:

இந்நகராட்சியின் பொதுசுகாதார பிரிவு வாகன எண் **T.N.60 A 2420** - க்கு வாகன தகுதி சான்று முடிவடைய உள்ளதால் மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்து தருவதற்கு **09.03.2018–**ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் கேள்வி விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ( ரூ ) |
|---|---|---|
| 01 | டி வி சுந்தரம் ஐயங்கார் அன்ட் சன்ஸ் பிரைவேட் லிமிட்டெட், தேனி பெரியகுளம் மெயின் ரோடு, மதுராபுரி – தேனி | 84575 |

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு ஒற்றை ஒப்பந்தப்புள்ளி கோரிய டி வி சுந்தரம் ஐயங்கார் அன்ட் சன்ஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தின் தொகையினை பொது சுகாதாரா அவசர அவசியம் கருதி ஏற்று பழுது பார்ப்பு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்தில் பழுது பணி மேற்கொள்ளுவதற்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.617/2017/எச்1)

**<u>தீர்மான எண். 472 1, 2 மற்றும் 3. அனுமதிக்கப்பட்டது.</u>**

## **பொருள் 11**:

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 33 முடிய உள்ள வார்டுகளில் வரிவிதிப்புகள் சிலவற்றை கட்டிடம் இடிக்கப்பட்டு மீண்டும் கட்டுமானம் செய்து புதிய வரிவிதிப்பு வழங்கும் போது பழைய வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்யப்பட்டு மாதாந்திர பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் காலியிடவரி விதிப்புகள் புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு புதிய சொத்துவரி வரிவிதிப்பு செய்யும் போது காலியிடவரி விதிப்பினை நீக்கம் செய்யப்பட்டு மாதாந்திர பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் வார்டு எண். 1 முதல் 33 முடிய உள்ள 518 (தொகை ரூ.20,17,597/-) வரிவிதிப்புகள் நீக்கம் செய்யப்படாமல் கணிணியில் கேட்பு வருகிறது. அதனை நகராட்சி நிர்வாக ஆணையர் அலவலகத்திற்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதற்கு அதனை கணிணியில் write off செய்யுமாறு தொலைபேசி செய்தியின் மூலமாக வரப்பெற்ற அறிக்கையின் மூலம் கணிணியில் write off செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

பழைய வரிவிதிப்பினை நீக்கம் செய்யப்பட்டு புதிய வரிவிதிப்புகள் விதிக்கப்பட்டுள்ளதால் வார்டு எண். 1 முதல் 33 முடிய உள்ள வார்டுகளில் காலியிடவரி விதிப்பு மற்றும் சொத்துவரி விதிப்புகள் ஐ நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1175/2017/அ1)

**தீர்மான எண். 473 அனுமதிக்கப்பட்டது.**

## **பொருள் 12**:

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 7234/14/ஆர்1 நாள். 15.03.2018ல் தெரிவித்துள்ளவாறு இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட அனைத்து அரசு கல்வி நிறுவனங்கள் , நகராட்சி கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.1175/2017/அ1)

**தீர்மான எண். 474 பதிவு செய்யப்பட்டது.**

## **பொருள் 13**:

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அலுவலகத்திற்கு புதிய அலுவலக கட்டடம் கட்டும் பணிக்கு அரசு நிர்ணயிக்கும் நகராட்சி பங்களிப்பு தொகையினை செலுத்திட இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்: 670 நாள்: 07-06-2013-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு தொகை செலுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| முதல் தவணை | 20-06-2014 | ரூ: 15.00 லட்சம் |
| இரண்டாம் தவணை | 16-03-2016 | ரூ: 21.00 லட்சம் |
| **மொத்தம்** | | **ரூ: 36.00 லட்சம்** |

மேலும் தற்போது மூன்றாவது மற்றும் இறுதி தவணைத் தொகையாக கூடுதல் பங்களிப்பு தொகை ரூ:7.80 லட்சம் (ரூபாய்: எழு லட்சத்து என்பது ஆயிரம் மட்டும்) செலுத்திட உத்தரவிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 08-03-2018 தேதிய ந.க.எண்: 30322/2012/இ3 கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின் படி மூன்றாவது மற்றும் இறுதி தவணைத் தொகையாக கூடுதல் பங்களிப்பு தொகை ரூ:7.80 லட்சத்தினை செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலக குறிப்பு :-

அ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

அ) ரூ:7.80 லட்சம் தொயினை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு செலுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2489/2014/இ1)

**தீர்மான எண். 475 அ, ஆ, இ மற்றும் ஈ அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 14:

தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான அலுவலகம், புதிய பேருந்து நிலையத்தில் உள்ள நகராட்சி முலம் பராமரிக்கப்படும் கழிப்பறை மின்மயானம் தெரு விளக்குகள் மற்றும் உயர் கோபுர மின் விளக்குகள் தேவையான மின்சாதன பொருக்ள் ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்கி கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,20,000/- ( ஒரு லட்சத்தி இருபது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செலவிட அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ள கோரியதை அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2018/இ2)

**தீர்மான எண். 476 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 15:

இந்நகராட்சிக்கு சொந்தமான கர்னல்ஜான் பென்னிகுயிக் பேரூந்து நிலையத்தில் உள்ள செகண்டரி பிளாக்கில் உள்ள க.எண்.66 குத்தகை உரிமத்திற்கு திரு.பி.தனபால் என்பவர் உரிமம் பெற்று கடை நடத்தி வந்தார். தற்போது 2017-2018-ம் ஆண்டு கடை வாடகை செலுத்ததாக காரணத்தால் 10.03.2018-ம் அன்று கடை அடைக்கப்பட்டது.

மேற்கண்ட கடை எண்.66 திரு.பி.தனபால் என்பவர்க்கு வழங்கிய குத்தகை உரிமம் ரத்து செய்து விட்டு க.எண். 66-க்கு மீண்டும் குத்தகை உரிமம் வழங்குவதற்கு மறு ஏலம் / மற்றம் ஒப்பந்தப்புள்ளி கோரவும் தினசரி நாளிதழில் அறிவிப்பு வழங்கவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 5647 /2018/அ3)

**<u>தீர்மான எண். 477 1. அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 16:

தேனி-அல்லிநகரம் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 60H2351–க்கு உரிய வாகனத்திற்கு தகுதிச்சான்று முடிவடைவதால் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்து புதியதாக இன்னும் ஒரு வருடத்திற்கு வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1,30,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4068 /2017/எச்1)

**<u>தீர்மான எண். 478 1, 2. அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 17:

தேனி-அல்லிநகரம் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 60K 4480–க்கு உரிய வாகனத்திற்கு தகுதிச்சான்று முடிவடைவதால் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்து புதியதாக இன்னும் ஒரு வருடத்திற்கு வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.90,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4068 /2017/எச்1)

**<u>தீர்மான எண். 479 1, 2. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 18</u>:

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்குகாய்ச்சசல் தடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு தேவையான கீழ்க்ண்ட விபரப்படியான மருந்துகளை தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டஸ்ட்ரியஸ் கோ-ஆப் சர்வீஸ் திருச்சி நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. பைரித்திரம் .. 40 லிட்டர்
2. டெக்னிக்கல் மாலத்தியான் .. 40 லிட்டர்

<u>**அலுவலகக்குறிப்பு**</u> :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியினை கருத்தில் தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டு மேற்காணும் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.2961/2017/எச்1)

<u>**தீர்மான எண். 480 1, 2. அனுமதிக்கப்பட்டது.**</u>

## <u>பொருள் 19</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சி குன்னூர் குடிநீர் திட்டம் மற்றும் NRT நகர் பூஸ்டர் மோட்டார்கள் பழுது பணிகள் மற்றும் குன்னூர் குடிநீர் திட்ட ஆற்றுப்படுகையில் நீர் வரத்து குறைந்த நேரங்களில் Hi மூலம் மணல் தடுப்பு போடுதல் ஆற்றின் குறுக்கே மணல் மூடை அடுக்குதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் பராமரிக்கப்பட்டது. ஒப்பந்தகாரர் முடிவுற்றதால் மேலும் ஒரு வருடத்திற்கு ஏப்ரல் 2018 முதல் ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆகும். உத்தேச செலவினம் ரூ.9.80 ( ரூபாய் ஒன்பது லட்சத்தி எண்பது ஆயிரம் மட்டும் ) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u> :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிட அனுமதக்கலாம்.
3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதக்கலாம். (ந.க.எண்.1170 /2018/இ2)

<u>**தீர்மான எண். 481 1, 2 மற்றும் 3. அனுமதிக்கப்பட்டது.**</u>

## <u>பொருள் 20</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சி வார்டு எண். 1 முதல் 16 வரையுள்ள மினி பவர் பம்புகள் மற்றும் கைபம்புகள் பழுது பணிகள் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் பராமரிக்கப்பட்டது. பராமரிப்பு காலம் முடிவுற்றதால் மேலும் ஒருவருடத்திற்கு ஏப்ரல் 2018 முதல் ஒப்பந்தப்புள்ளி கோரி பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.80 (ருபாய் ஒன்பது லட்சத்தி எண்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிட அனுமதக்கலாம்.
3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதக்கலாம். ( ந.க.எண்.1168/2018/இ2)

**<u>தீர்மான எண். 482 1, 2 மற்றும் 3. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 21</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சி பகுதிகளில் உள்ள பகிர்மான குழாய், பிரதான குழாய்கள் நீர் கசிவு சீர் செய்தல் மற்றும் மேல் நிலை நீர்தேக்க தொட்டிகள் சுத்தம் செ.தல் போன்ற பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வந்தது. மேற்கண்ட ஒப்பந்தகாலம் முடிவடைவதால் ஏப்ரல் 2018 முதல் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் பராமரிப்பு பணி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.00 (ரூபாய் ஒன்பது லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிட அனுமதக்கலாம்.
3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதக்கலாம். ( ந.க.எண்.1169/2018/இ2)

**<u>தீர்மான எண். 483 1, 2 மற்றும் 3. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 22</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சி பழனிசெட்டிபட்டி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் வீரப்ப அய்யனார் கோவில் குடிநீர் திட்ட மோட்டார்கள் பழுது சீர் செய்தல், கேபில்கள், பேனர் போர்டுகளில் ஏற்படும் பழுதுகளை சீர் செய்யவும் மற்றும் வால்வுகள் பழுது சீர் செய்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஒருவருடத்திற்கு ஏப்ரல் 2018 முதல் ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் பராமரிக்க ஆகும் உத்தேச சசலவினம் ரூ.9.80 (ரூபாய் ஒன்பது லட்சத்தி எண்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிட அனுமதக்கலாம்.
3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதக்கலாம். ( ந.க.எண்.1171/2018/இ2)

**<u>தீர்மான எண். 484 1, 2 மற்றும் 3. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 23</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்.17 முதல் 33 வரை உள்ள மினிபவர் பம்புகள் மற்றும் கைப்புகள் பழுதுகள் சீர் செய்து பராமரிப்பு பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் பராமரிப்பு மேறகொள்ளப்பட்டது. மேற்கண்ட பராமரிப்பு காலம் மார்ச் 2018 உடன் முடிவுற்றதால் மேலும் ஒருவருட காலத்திற்கு ஏப்ரல் 2018 முதல் ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் பராமரிக்க ஆகும். உத்தேச செலவினம் ரூ.9.80 லட்சம் (ரூபாய் ஒன்பது லட்சத்தி எண்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிட அனுமதக்கலாம்.
3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம். ( ந.க.எண்.1172/2018/இ2)

**<u>தீர்மான எண். 485 1, 2 மற்றும் 3. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 24</u>:

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 22.03.2018-ம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில் சொத்துவரி கேட்பிற்கு ஏற்றாற்போல் குடிநீர் இணைப்புகள் 31.07.2018-ம் தேதிக்குள் வழங்கப்பட வேண்டுமென (Internal Plumping of Water Supply House Service Connections ) அறிவுறுத்தப்பட்டதன்படி தேனி-அல்லிநகரம் நகராட்சியில் 27203 சொத்துவரி கேட்பின் எண்ணிகையின்படி தற்பொழுது வரை 20,000 குடிநீர் இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பொருள் குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், மதுரை அவர்களின் 26.03.2018-ந்தேதிய ஆய்வுக்கூட்டத்தில் இந்நகராட்சிக்கு கூடுதலாக 6,590 குடிநீர் இணைப்புகள் வழங்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க மேற்கண்ட இணைப்புகளுக்கு மதிப்பீடு ரூ.520.00 இலட்சத்திற்கு தயார் செய்து நிர்வாக அனுமதி வேண்டி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :

1. மதிப்பீட்டுத்தொகை ரூ.520.00 லட்சத்தைTUFIDCO நிறுவனம் மூலம் வட்டியில்லா கடனாக பெற்று மேற்கண்ட பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய கருத்துரு சமர்.பிக்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1124/2018/இ2)

**<u>தீர்மான எண். 486 1. அனுமதிக்கப்பட்டது.</u>**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி